### தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# "நலம் காக்கும் ஸ்டாலின்" பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன் – மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தனர்!

சிவகங்கை, பிப்.9–

சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் "நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் ஆகியவைகளை தொடங்கி வைத்து, பார்வையிட்டனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர், சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட குன்றக்குடி, தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் (7.2.2026) தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் ஆகியவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, அவர்கள் தலைமையில், தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் மற்றும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், முதலமைச்சர் அவர்கள் பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி, பொதுமக்களின் நலன் காத்து வருகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து, அதன் வாயிலாக தரமான மருத்துவ சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

அதில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், பாதம் பாதுகாப்போம், நடப்போம் நலம் பெறுவோம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவ திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என ஏராளமான திட்டங்கள் மக்களின் நலன் காக்கின்ற வகையில் பயன்பாட்டில் உள்ளது.

அத்திட்டங்களைத் தொடர்ந்து, கடந்த ஆகஸ்ட் 2–ஆம் தேதியன்று "நலம் காக்கும் ஸ்டாலின் எனும் புதிய திட்டமானதும், முதலமைச்சர் அவர்களால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.

இம்முகாமானது, தமிழகம் முழுவதும் 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என ஆக மொத்தம் 1,256 முகாம்கள் நடத்திட அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1,140 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இதன் வாயிலாக 17,03,683 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 39 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 33 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இம்முகாம்களின் வாயிலாக மொத்தம் 41,022 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். மேலும், இன்றையதினம் கல்லல் மற்றும் கண்ணங்குடி வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் இரண்டு முகாம்களும் என இன்றையதினம் வரை இம்மாவட்டத்தில் 35 முகாம்கள் நிறைவு பெறுகிறது.

மேலும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் மாவட்ட அளவிலான நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இன்றையதினம் சிறப்பு மருத்துவ முகாமானது, நலம் காக்கும் ஸ்டாலின் முகாமுடன் இணைந்து நடைபெறுவது சிறப்பான நிகழ்வாக அமைந்துள்ளது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் காலங்களில் சிறந்த கல்வி சேவையும், பொதுமக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையும் வழங்கும் பணியில் தன்னை அர்பணித்துக் கொண்டு, சிறப்பாக சேவையினை வழங்கியுள்ளார்கள். அன்னார் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, சிறந்த மருத்துவ சேவையினை பொதுமக்கள் பெற்றிடும் பொருட்டு, இம்முகாம்களானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம்முகாம்களில், பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம்,எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம்,கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவ சேவைகள் மட்டுமன்றி, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அட்டைகளும், மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, தமிழகம் முழுவதும் நடைபெற்ற முகாம்களின் வாயிலாக 46,287 நபர்கள் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அட்டைகள் மற்றும் 56,866 மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் பெற்று பயனடைந்துள்ளனர்.

குறிப்பாக, இம்முகாம்களில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் முழு உடல் பரிசோதனைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், முதல மைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்தல் போன்ற இணைச் சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், இன்றையதினம் தமிழகம் முழுவதும் 23 மாவட்டங்களில் 38 இடங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக, அரியலூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டிணம், பெரம்பலூர், இராணிப்பேட்டை, நீலகிரி, தேனி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய 10 மாவட்டங்களில் திட்டமிட்டபடி முகாம்கள் முழுவதுமாக சிறப்பாக நிறைவு பெற்றுள்ளதும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

மருத்துவத்துறைக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்ற வகையில், முதலமைச்சர் அவர்களின் இரண்டு மிகப்பெரிய சிறப்பு திட்டங்களான ரூபாய் 417 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டில் உலகிலேயே மிகப்பெரிய குழந்தைகளுக்கான பிரத்யேக மருத்துவமனை ஆராய்ச்சி மையமும், பெண்களை அதிகம் பாதிக்கும் கர்ப்பபை வாய் புற்றுநோயினை தடுப்பதற்கு ஏதுவாக முன்னெச்சரிக்கையாக செலுத்தப்படும் HPV தடுப்பூசி பணியும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி பணியின் மூலம் 14 வயதுடைய சுமார் 3,38,679 இளம் பெண்கள் பயனடையவுள்ளனர்.

பெண்கள் கர்ப்பபை வாய் புற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்கு, உலக அளவில் முதல் முறையாக தமிழகத்தில் HPV தடுப்பூசி செலுத்தும் பணி, சிறப்பாக நடைபெறுவது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

இந்நிகழ்ச்சியில், முதல்வர் (பொ) சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மரு.ஜடாமுனி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.ஜெயகீதா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. மீனாட்சி, திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஜெ. ஆல்வின் ஜேம்ஸ் மற்றும் சுகாதாரத்துறையை சார்ந்த மருத்துவர்கள், அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# கொளக்காநத்தம் ஊராட்சியில் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் துணை மின் நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*பெரம்பலூர், பிப்,09-*

*பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டத்திற்குட்பட்ட கொளக்காநத்தம் ஊராட்சியில், புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தின் கீழ் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் 33 / 11 kv திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி, தலைமையில் தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*இந்நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் மின் பகிர்மானத்தை மேம்படுத்தவும், தடையில்லா மின்சாரம் வழங்கவும் பல்வேறு இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு திறக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கொளக்காநத்தம் பகுதிக்கு துணை மின் நிலையம் வேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்ட நாள் கோரிக்கை வைத்து வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் கொளக்காநத்தம் ஊராட்சியில், 33 / 11 kv திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.*

*கூத்தூர் 110/33-11 கி.வோ, புதுக்குறிச்சி 110/22 கி.வோ மற்றும் கூடலூர் 33/11 கி.வோ துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் பெற்று வரும் கொளக்காநத்தம், அயினாபுரம், அணைப்பாடி, சாத்தனூர், சா.குடிக்காடு, இலுப்பைக்குடி, கூடலூர். கொட்டரை. ஆதனூர், பெரியம் மாபாளையம், கரம்பியம் மற்றும் மூங்கில்பாடி மின் பகிர்மானங்களில் உள்ள பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் தொழில் துறை பயன்பாட்டாளர்களுக்கு தரமான மற்றும் நிலையான மின்சார சேவை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டு வந்தது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் சுமார் 8,000 மின் நுகர்வோர்கள் பயன் பெறும் வகையில் இந்த பணி தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தடையற்ற மின்சார சேவை வழங்கப்படுவதுடன் மின் அழுத்த குறைபாடுகளுக்கு முழுமையாக தீர்வு காணப்படும்.*


*இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், திருச்சி மின் பகிர்மான தலைமை பொறியாளர் எம்.கீதா, மேற்பார்வை பொறியாளர் மேகலா, செயற்பொறியாளர்கள் பரமேஸ்வரி, அசோக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காளி வி.எஸ்.வாசன்

### பிப்ரவரி 9 (2007)



**மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.**

**முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.**


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தமிழின் தனித் தன்மையைப் பேணிக் காத்திட

# தனித் தமிழறிஞர் பாவாணர் வாழ்க!

## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்தநாளில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, பிப்.9-**



**மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாள் நேற்று! அதனை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவில் "தமிழின் தனித் தன்மையைப் பேணிப் பாதுகாத்திட்ட தனித் தமிழறிஞர் பாவாணர் வாழ்க!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலை தளப் பதிவு வருமாறு :-

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்தநாள்

"தனித்தமிழ்க்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்; நானே மரமாக வளர்த்து வருகிறேன்" எனத் தம் தமிழ்ப்பணியை மதிப்பிட்டார் பாவாணர்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தைத் தம் வாழ்நாள் கடமையாக எண்ணி உழைத்தார்.


இந்திய மொழிகளிலேயே வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பாகத் தமிழின் தனித்தன்மையைப் பேணிக் காத்திட்ட தனித்தமிழறிஞர் பாவாணர் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



நாகை மாவட்டம் நாகை நகர கழகமுன்னாள் செயலாளர் போலீஸ் அ.பன்னீர் நினைவு நாளை முன்னிட்டு திரு உருவ படத்திற்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மற்றும் நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர் . பாண்டியன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், எஸ்.பால்ராஜ், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஆர்.ஆர். குலோத்துங்கன், நகர்மன்ற உறுப்பினர் கலாபாலு மற்றும் நகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# சங்கமிக்கும் சிங்கநாதம்!



பின்தொடர
இருப்பதும்

ஏழாம் முறை
கழகத்தின்
ஆட்சியே
என்பதால்

அதற்கு
பிப்ரவரி ஏழில்

முன்னோட்டம்
பார்த்து
முகூர்த்தம்
குறித்திட

தென்மண்டல
இளைஞரணி
மாநாடு

வித்தக
பூகோளமான
விருதுநகர்
சீமையில்...

ஆம்...

அரசியலில் தி.மு.க.வின்
இளைஞர்சக்தி எவ்வளவு
வலிமையானது என்பதை

உலகுக்கு உணர்த்திய
அதே
விருதுநகரில்

பெரியாரின்
பேரிகை
ஒலி கேட்டு

கலைஞர் எனும்
பொற்காலத்திடம்

முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலின் எனும்
போர்க்களத்திடம்
கற்றுத் தேர்ந்திருக்கும்

எங்கள்
கழகத்தின்
கரிகாற்சோழன்

ஒப்பில்லா பேரிளைஞர்
உதயநிதி ஸ்டாலினின்
படை நடத்தலில்

இருநூறை
வெல்ல

"நாளைத்
திருநாடும்
நம்மதடா"
என்னும்
எதிர்காலம்
சொல்ல

பொங்கு தமிழ்
இளைஞர் படை

புறநானூற்று
பூமியில்
சங்கமித்து

சங்கநாதம்
இசைக்கட்டும்

புதுச் சரித்திரம்
உதிக்கட்டும்..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு
துணைத்தலைவர்